செ.வெ.எண்:61 நாள்:23.11.2017

# பொதுமக்களின் மேலான கவனத்திற்கு

## அங்கிகரிக்கப்படாத /அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் விதி-2017 தொடர்பான முக்கிய அறிவிப்பு (அரசாணை (நிலை) எண் 78 மற்றும் 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ந.வ4(3) துறை, நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017)

திருநெல்வேலி மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்படாத /அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை கீழ்கண்ட விதிமுறைகளை பின்பற்றி பொதுமக்கள் தங்களுடைய மனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள வேண்டப்படுகிறார்கள்.

------------------------------------ **விண்ணப்பிக்கும் முறை** ----------------------------------------

தங்களுடைய மனைப்பிரிவு மனையானது 20.10.2016-க்கு முன்பு பத்திரப்பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மனை அல்லது மனைப்பிரிவின் உரிமையாளர் வரன்முறைகோரும் விண்ணப்பத்தினை www.tn.layoutreg.in என்ற இணையதளத்தின் (Online) மூலமாக திருநெல்வேலி மாநகராட்சி /சம்பந்தப்பட்ட நகராட்சி /ஊராட்சி ஒன்றியம் /பேரூராட்சிகளின் மூலமாக திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி உள்ளூர் திட்டப் பகுதிக்குள் அமையுமாயின் உறுப்பினர் செயலர், திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமத்திற்கும், மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் அமையுமாயின் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி மண்டலத்திற்கும் 03.05.2018-க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

| வ. எண் | விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | விண்ணப்பிக்கக் கூடியவர்கள் |
|---|---|---|
| 1. | சாலை மற்றும் மனைகளின் பட்டா அளவுகளுடன் ஐந்து மனைப்பிரிவு வரைபடங்கள் (Layout Plan) | மனைப்பிரிவு உரிமையாளர் (Layout Promoter)<br>பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள்<br>குடியிருப்போர் நல சங்கம் (Owners Association) |
| 2. | சுற்றுசார்பு வரைபடம் (TOPO Plan) | |
| 3. | சுய கையொப்பமிட்ட பதிவு செய்யப்பட்ட பத்திர நகல் | |
| 4. | பட்டா, சிட்டா, அடங்கல் நகல் | |
| 5. | விண்ணப்பத்திற்கு ஒரு வாரத்திற்குள் வழங்கப்பட்ட வில்லங்கச்சான்று | |
| 6. | மனைப்பிரிவானது விவசாய நிலத்தில் அமைந்திருந்தால், அவைகள் பொதுப்பாசன வாய்க்கால் /கால்வாய்களுக்கு இடையூறாக இல்லை மற்றும் வெள்ள வடிகால் பாதைக்கு தடையாக அமையவில்லையென வருவாய் வட்டாட்சியரால் அளிக்கப்பட்ட சான்றிதழ் | |
| 7. | குறைந்தபட்ச சாலை அகலம் | மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் 16 அடி அல்லது 4.80மீட்டர்<br>ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 12 அடி அல்லது 3.60மீட்டர் |

மனைப்பிரிவுகள் தகுதிவாய்ந்த அலுவலர்களால் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னரே, தனிமனைகட்கு உள்ளாட்சிகளில் தகுதிவாய்ந்த அலுவலரால் மனைகள் வரன்முறைப்படுத்தப்படும்.

**வரன்முறைப்படுத்தப்படாத மனைகள் அல்லது மனைப்பிரிவுகளுக்கு கீழ்கண்ட சலுகைகள் கிடைக்கப்பெற வாய்ப்பில்லை.**

1. மின்சாரம், குடிநீர், வடிகால் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட மாட்டாது.
2. அங்கீகரிக்கப்படாத மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை வாங்குவதற்கோ / விற்பதற்கோ பதிவுத்துறைச்சட்டம் 1908 (மத்தியச்சட்டம் 1908)-ன் கீழ் பதிவு செய்ய இயலாது.
3. வரன்முறைச் செய்யப்படாத /அனுமதி பெறாத மனைகளில் அபிவிருத்தி செய்வதற்கு திட்டம் மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலாது.

எனவே விண்ணப்பிக்கக்கூடியவர்கள் உடனடியாக மனுசெய்து தங்களின் மனைகளை வரன்முறைப்படுத்தி பயன்பெற வேண்டப்படுகிறார்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்
2. உறுப்பினர் செயலர், திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்
3. ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி
4. ஆணையாளர், சம்பந்தப்பட்ட நகராட்சிகள்
5. வட்டார வளர்ச்சி அலுவலர், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள்
6. செயல் அலுவலர், சம்பந்தப்பட்ட பேரூராட்சிகள்

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி மாவட்டம்

**வெளியிடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**